**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்**

முன்னிலை : திரு. S.இராமச்சந்திரன், பி,எல்.,

முதன்மை சார்பு நீதிபதி, திருப்பூர்.
கூடுதல் சார்பு நீதிமன்றம்,
திருப்பூர் (FAC).

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், ஆவணி மாதம் 18–ம் நாள்)

**இடைநிலை மனு எண். 5/2024**

**in**

**அசல் மனு எண். 168/2023**

சுப்பிரமணி ...மனுதாரர்/அவசிய தரப்பினர் (Proposed Party)

//எதிர்//

A.அருணாசலம் .....எதிர்மனுதாரர்/வாதி

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர்.
2. நிலவருவாய் ஆய்வாளர், திருப்பூர் தெற்கு,
3. வட்டாட்சியர் திருப்பூர் தெற்கு ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு கடந்த 29.08.2024–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/அவசிய தரப்பினர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சரவணக்குமார்,பி.ஏ.,பி,எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் M.பார்த்திபன், எம்.டெக்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசுத்தரப்பு வழக்கறிஞர் திரு.R.அரிகரன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும்.

**//உத்தரவு//**

இந்த மனு உரிமையியல் நடைமுறை சட்ட தொகுப்பு கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர் தன்னை இந்த வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/அவசிய தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் : –**

2.1 மனுதாரர் தனது மனுவுரையில், மேற்படி மனுவின் படி வழக்கு சொத்தானது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் அதன் சர்வே எண்.689/1–ல் அமைந்துள்ளது மேற்படி சொத்தை அப்பகுதி பொதுமக்கள் தங்கள் சமுதாயத்தின் பாவாடி நிலமாக அதாவது கைத்தறி நெசவு நூல் மற்றும் துணி தயாரிக்கும் இடமாக கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள். இவ்வாறாக, பயன்பாட்டில் உள்ள நிலத்தை மேற்படி மனுதாரர் தனிப்பட்ட முறையில் சட்ட முரணாக அபகரிக்க பல ஆண்டுகளாக முயன்று வருகிறார். இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடமும் பல உயர் அதிகாரிகளுக்கும் மனு அளித்தும் பல போராட்டங்களை செய்து வருகிறார்கள். மேற்படி தாவாச் சொத்தானது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள நிலையில் மேற்படி பொதுமக்களின் ஒருவராக மனுதாரரும் பல பொதுமக்களும் இணைந்து சொத்தை மீட்க முயன்று வருகிறார்கள். மேற்படி உண்மை நிலையை மறைத்து 1ம் எதிர்மனுதாரரான வாதி இந்த நீதிமன்றத்தில் மேற்படி சொத்தானது தனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் பெற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2.2 அவ்வாறு வழக்கு தாக்கல் செய்வதற்கு அவருக்கு அருகதையும் கிடையாது. சட்டம் முரணான வடிவில் அபகரித்து தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த வழக்கில் உண்மை நிலையை கொண்டு வர வழக்கு சொத்தானது 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று நிரூபிக்க மனுதாரரை ஒரு தரப்பினராக சேர்த்து வழக்கினை நடத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே மனுதாரர்/அவசிய தரப்பினரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் : –**

3.1 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் மனுவிற்கு எதிராக எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 எதிர் மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையில் தாவா தனது அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் ஆகும். மேற்படி சொத்தினை வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதனை மீட்க அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது வழக்கு சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலம் என்பதால் அதில் வாதிக்கோ அல்லது மூன்றாம் தரப்பினருக்கோ பாத்தியம் ஏதும் இல்லை. எனவே வழக்கில் சொல்லப்பட்டுள்ள பிரச்சனையானது வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள நிலையில், அதில் மனுதாரர் தன்னை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு சேர்க்க வேண்டிய முகாந்திரமும் இல்லாத காரணத்தால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகும்.

**4. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் : –**

4.1 எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில் மனுதாரர் வேண்டுமென்றே தனக்குத் தெரிந்த கதைகளை இந்த நீதிமன்றத்தில் மனுவாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. எனவே எடுத்த எடுப்பிலேயே அதனை தள்ளுபடி செய்ய வேண்டும். வாதியே யாருக்கு எதிராக பரிகாரம் கோர தகுதி படைத்தவர் என்பதை அவரே முடிவு செய்யும் நிலையில் இருப்பதால் மூன்றாம் நபரான மனுதாரர் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் அல்ல. அவ்வாறு இந்த மனு தாக்கல் செய்வதற்கு அவருக்கு அருகதை ஏதும் கிடையாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள பிரச்சனையானது வாதிக்கும் பிரதிவாதிகளான அரசுக்கும் இடையே ஆனது. அதில் மனுதாரர் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் தன்னை தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்த மனுவுடன் எந்த ஒரு ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுவில் கோரியுள்ள வாதியின் உரிமையினை மறுக்கும் வகையிலும், இந்த வழக்கை காலம் கடத்த

வேண்டும் என்ற ஒரு கெட்ட எண்ணத்திலும், வேண்டுமென்று பொய்யான தகவல்கள் கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் அதனை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகும்.

4. இருதரப்பிலும், ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் மனுவுரை மற்றும் எதிர் மனு உரையில் கண்டுள்ள சங்கதிகளை தங்களது வாதங்களாக முன் வைத்துள்ளார்கள். இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**5. தீர்வு :–**

5.1 இரு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தங்களது வாதங்களையும், மனுவுரையில் சொல்லியுள்ள சங்கதிகளையும் மற்றும் எதிர்மனுவுரையில் சொல்லியுள்ள சங்கதிகளையும் முன்னிலைப்படுத்தி வாதிட்டனர்.

5.2 இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் வழக்குரை, எதிர்வழக்குரை மனுவுரை மற்றும் எதிர்மனுவுரையினை ஆராய்கையில், வாதியான 1ம் எதிர்மனுதாரர் அரசுக்கு எதிராக தாவாச் சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். குறிப்பாக, தாவாச் சொத்து தனது அனுபவ சுவாதீனத்தில் உள்ளதென்றும், அதில் அவர் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் தாவாச் சொத்து ஆக்கிரமிப்பு என்று கருதி வாதிக்கு எதிராக ஆக்கிரமிப்பை அகற்றுவது சம்மந்தமாக அறிவிப்பு கொடுத்ததாகவும், ஆனால், வழக்குச் சொத்தில் தனக்கு உரிமை உள்ளது என்றும், அது தனக்கு பாத்தியப்பட்டது என்றும் விளம்புகை பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5.3 அரசு தரப்பில் வாதியின் வழக்கினை மறுத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அரசு தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். இந்நிலையில், மனுதாரர் ஆன மூன்றாம் நபர் மேற்படி வழக்கு சொத்து பொதுமக்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும், அதில் பொதுமக்கள் குறிப்பாக நெசவுத் தொழில் செய்து வந்தும், பொதுமக்கள் பாவாடி நிலமாக கைத்தறி நெசவு நூல் மற்றும் துணி தயாரிக்கும்

இடமாக கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், மேற்படி பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள நிலத்தினை வாதி தனிப்பட்ட முறையில் சட்ட முரணாக அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று மனுதாக்கல் செய்துள்ளார் என்பதே ஆகும்.

5.4 ஆக, மனுதாரரின் கூற்றுப்படி தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்பதை ஒத்துக் கொண்டும், அதில் பொதுமக்கள் பாவாடி நிலமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையும், மேற்படி பொதுமக்களின் சார்பில் இந்த மனுதாரர் தன்னை ஒரு அவசியத்தரப்பினராக சேர்க்க இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். சாதாரணமாக, பொதுமக்களின் சார்பில் ஒரு வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றாலோ அல்லது பொதுமக்களின் சார்பில் ஒரு நபர் ஒரு வழக்கினை எதிர்கொள்ள வேண்டும் என்றாலோ உரிய மனுவை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் மூலமாக அனுமதி பெற்று இரண்டு நபர்களும் அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட நபர்களோ தங்களை பொதுமக்களின் சார்பில் எதிர்வழக்காட அனுமதி பெற வேண்டும். அவ்வாறு மனுதாரர் இந்த வழக்கில் அனுமதி ஏதும் பெற்று மனுவை தாக்கல் செய்யவில்லை. எனவே இந்த மனு தாக்கல் செய்துள்ள நிலையிலேயே பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

5.5 மேலும், மனுதாரர் தனது மனுவுடன் தானோ அல்லது பொதுமக்களோ தாவாச் சொத்தானது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்று மாவட்ட நிர்வாகத்திடம் மனு கொடுத்ததாக கூறும் நிலையில், அவ்வாறு மனு கொடுத்ததை நிரூபிக்கும் வகையில், எந்தவித ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறான நிலையில், மனுதாரரின் மனு ஏற்கத்தக்கதா என்பது இந்த நீதிமன்றத்திற்கு பெருத்த சந்தேகம் ஏற்படுத்துகிறது.

5.6 எனினும், இந்த மனு தாக்கல் செய்த நிலையிலேயே நிலைக்கத் தக்கது அல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில், அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள வாதியே தனது வழக்கினை நிரூபிக்க வேண்டும் என்று உள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும், இல்லை என்றாலும்

வாதி தனது வழக்கினை நிரூபித்தால் மட்டுமே நீதிமன்றத்தின் மூலமாக நிவாரணம் பெற இயலும் என்று உள்ள நிலையில் இந்த நீதிமன்றம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு ஏற்கத்தக்கது அல்ல என்று முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.09.03 18:23:23 +0530

கூடுதல் சார்பு நீதிபதி, (FAC)
திருப்பூர்.

*********************

**Fair order in**
**I.A.No. 5/2024**
**O.S. No. 168/2023**
**Date : 03.09.2024**
**ASJ Court, Tiruppur.**

*********************